நாள் : 20.06.2014

## இன்றைய வேளாண் செய்திகள்

தினமணி

**வண்டலூர் பூங்காவில் வன அருங்காட்சியகம் திறப்பு**

**சென்னை**:

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ரூ.16.5 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள வன அருங்காட்சியகம் பொதுமக்கள் பார்வைக்காக வியாழக்கிழமை (ஜூன் 19) திறக்கப்பட்டது.

இது குறித்து பூங்கா நிர்வாகம் வெளியிட்ட செய்தி:-

வண்டலூர் பூங்கா முகப்பில் அமைக்கப்பட்டுள்ள வன அருங்காட்சியகத்தில், அரிய வகை வண்ணத்துப் பூச்சிகள், வண்டுகள், மண் வகைகள், அரிய தாவரங்கள், கனிமங்கள், பாறைகள் மற்றும் அரிய வகை மரங்களின் மாதிரி தோற்றங்கள் வடிவமைக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.இதனை பொதுமக்கள் பயன்பாட்டுக்காக வனத் துறை அமைச்சர் எம்.எஸ்.எம்.ஆனந்தன் வியாழக்கிழமை தொடங்கி வைத்தார். பூங்காவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பார்வையாளர்கள் உணவருந்துமிடம், வெள்ளைப் புலிக் குட்டிகளின் செயல்பாடுகளை நேரடியாக ஒளிபரப்பும் கணினித் திரை ஆகியவற்றையும் அமைச்சர் ஆய்வு செய்தார்.

**இன்று விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம்**

**திருவள்ளூர்**:

மக்களவைத் தேர்தலுக்கு பின்னர் திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் மாதாந்திரக் குறைதீர்வு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 11 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில்

நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் ஆட்சியர் கொ.வீரராகவராவ் பங்கேற்கிறார். மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வருவாய்த் துறை, மின்வாரியம், கூட்டுறவுத்துறை, பொதுப்பணித்துறை, வேளாண் பொறியியல் துறை, மீன்வளத்துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை உள்ளிட்ட துறை அலுவலர்கள் பங்கேற்கவுள்ளனர்.

எனவே இம்மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று பயன்பெற வேண்டும் என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>பயறுவகைப் பயிர்கள் சாகுபடியால் மண்வளம் மேம்படும்</u>**

**புதுக்கோட்டை**:

புதுக்கோட்டை அருகேயுள்ள குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில், விவசாயிகளுக்கு பயறுவகை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி புதன்கிழமை அளிக்கப்பட்டது.

சடையம்பட்டியில் நடைபெற்ற பயிற்சியை வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜஹான் தொடக்கிவைத்து பேசியது:

பயறுவகைப் பயிர்கள் சாகுபடி செய்வதால் குறைந்த நாட்களில் கூடுதல் வருமானம் கிடைப்பதோடு மண்வளமும் மேம்படுகிறது. பயறுவகைகளுக்கு நல்ல சந்தை வாய்ப்பு இருப்பதால், விவசாயிகள் குறைவான தண்ணீரைப் பயன்படுத்தி சாகுபடி செய்து கூடுதல் லாபம் பெறலாம் என்றார்.

பயிற்சியில் பயறுவகைப் பயிர்களின் தொழில்நுட்பங்களான விதைநேர்த்தி, பயிர் எண்ணிக்கைப் பராமரிப்பு, உர நிர்வாகம், நீர் நிர்வாகம், 2% டி.ஏ.பி. ஊட்டச்சத்து கரைசல் தெளித்தல் போன்றவை குறித்து படக்காட்சி மூலம் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு பயறு தொழில்நுட்பங்கள் அடங்கிய கையேடும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் மானிய விலையில் பயறு அதிசயம் என்ற வளர்ச்சியூக்கியும் வழங்கப்பட்டது. உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் வசந்தி, வேளாண் அலுவலர் ராஜசேகரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நாகேந்திரன்

உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் மணிமுத்து, அருளானந்தம், குமாரசாமி ஆகியோர் செய்திருந்தனர்.

**<u>தஞ்சை மாவட்ட குறுவை சாகுபடிக்கு ரூ. 9.19 கோடி ஒதுக்கீடு</u>**

**தஞ்சாவூர்**:

குறுவை சாகுபடி சிறப்புத் திட்டத்தின் அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்துக்கு ரூ. 9.19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் வேளாண்மைத் துறை முதன்மைச் செயலர் சந்தீப் சக்சேனா.

தஞ்சை ஆட்சியரகத்தில் தஞ்சாவூர், திருச்சி, அரியலூர் மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு ஆட்சியர் என். சுப்பையன் தலைமை வகித்தார். வேளாண் இயக்குநர் மு. ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் சந்தீப் சக்சேனா பேசியது:

குறுவை சாகுபடியை மேற்கொள்ள 7 அம்ச திட்டத்தை மாநில அரசு அறிவித்துள்ளது. இதன்படி, 12 மணி நேர தடையில்லாத மும்முனை மின்சாரம், நீர் ஆதாரங்களில் இருந்து வயலுக்கு நீர் வீணாகாமல் கொண்டு செல்ல உதவும் வகையில் 600 அடி குழாய்கள் 7 ஆயிரம் விவசாயிகளுக்கு 100 சத மானியத்தில் வழங்கப்படுதல் என்பது உள்ளிட்ட 7 அம்ச திட்டங்களை செயல்படுத்துவதற்காக டெல்டா முழுமைக்கும் ரூ. 32.9 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறுவை சாகுபடி சிறப்புத் திட்டத்தின் அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்துக்கு ரூ.9.19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் காவிரி நீர் வரும்போது வாய்க்கால் பாசனம் மூலம் 13,000 ஹெக்டாரிலும், நிலத்தடி நீர் ஆதாரத்தை பயன்படுத்தி 31,000 ஹெக்டாரிலும் என மொத்தம் 44,000 ஹெக்டாரில் நடப்பாண்டில் குறுவை நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை குறுவை பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் 5,790 ஹெக்டாரிலும், இயல்பான சாகுபடி முறையில் 3,167

ஹெக்டாரிலும், என மொத்தம் 8,907 ஹெக்டர் நிலப்பரப்பிலும் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

குறுவை சாகுபடிக்கு தேவையான தரமான சான்று பெற்ற ஆடுதுறை-43, ஆடுதுறை-45 ரக நெல் விதைகள் 41 மெட்ரிக் டன் வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், 103 மெட்ரிக் டன் தனியார் நிறுவனங்களிலும் இருப்பு வைத்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.

குறுவை பருவத்திற்கு தேவையான யூரியா 6,532 மெட்ரிக் டன் கூட்டுறவு நிறுவனங்களிலும் மற்றும் தனியார் நிறுவனங்களிலும் இருப்பு வைத்து விநியோகிக்கப்படுகிறது. டி.ஏ.பி 1991 மெட்ரிக் டன் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிலும் இருப்பு வைத்து விநியோகிக்கப்படுகிறது. பொட்டாஷ் 1215 மெட்ரிக் டன் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களிலும் இருப்பு வைத்து விநியோகிக்கப்படுகிறது என்றார் சந்தீப் சக்சேனா.

கூட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை முதன்மை பொறியாளர் எம். செந்தில், மூன்று மாவட்ட வேளாண்மை அலுவலர்கள், வேளாண்மைத் துறை அலுவலர்கள், மின்சார வாரியம், பொதுப்பணித் துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**"திருந்திய நெல் சாகுபடி மூலம் கூடுதல் மகசூல்'**

**பெரம்பலூர்**:

கூடுதல் மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடியில் ஈடுபடலாம் என்றார் வேளாண் துறை இணை இயக்குநர் அழகிரிசாமி.

பெரம்பலூர் மாவட்ட ஒருங்கிணைந்த வேளாண் அலுவலகக் கூட்டரங்கில், பெரம்பலூர், அரியலூர் மாவட்ட அளவில் உள்ள உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கான 2 நாள் தொழில்நுட்ப பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

பயிற்சியைத் தொடக்கி வைத்த அவர் மேலும் பேசியது:

சாதாரண நெல் முறையைக் காட்டிலும் திருந்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்றினால் கூடுதல் மகசூல் பெற்று பயன் பெறலாம்.

திருந்திய நெல் சாகுபடி என்பது ஒற்றை நாற்று நடவு முறை. ஒரு ஏக்கரில் சாதாரணமாக நெல் நடவு செய்ய 8 செண்டுகளில் 40 கிலோ விதை நெல்லைக்கொண்டு நாற்றங்கால் தயாரிக்க வேண்டும். ஆனால், திருந்தி நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 2 கிலோ விதை மட்டும் போதும். சாதாரண நாற்றுகளைப் போல் இன்றி திருந்திய நெல் சாகுபடி நாற்றுகளை 15 நாள்களிலேயே எடுத்து வயலில் நட்டு விடலாம்.

இந்த நாற்றுகளை நடவு இயந்திரத்தில் எளிதாக நடவு செய்ய முடியும். கோனோவிடரைக்கொண்டு எளிதாகக் களையெடுக்கலாம். திருந்திய நெல் சாகுபடி முறைக்கு குறைந்தளவு தண்ணீர் தேவைப்படும்.

மேலும், குறைந்த நாள்களில் அதிக லாபத்தை பெறலாம். ஒற்றை நாற்றுகளை நடுவதால் விதை அளவு குறைந்து, மகசூலின் அளவு அதிகரிக்கச் செய்கிறது.

குறிப்பாக, சாதாரண சாகுபடி முறையில் ஒரு ஏக்கரில் 3 டன் நெல் அறுவடை செய்யலாம் என்கிற நிலையில், திருந்திய நெல் சாகுபடி முறையில் ஏக்கருக்கு 4 டன் நெல் மகசூல் பெறலாம்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண் விரிவாக்க மையங்களிலும் விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. திருந்திய நெல் சாகுபடிக்கான இடுபொருள்களான உரம், பூச்சி மருத்து, களைக்கொல்லி, நுண்ணூட்டச் சத்து, உயிர் உரம் ஆகியவை இருப்பில் உள்ளது. திருந்திய நெல் சாகுபடிக்கு முன், விவசாயிகள் கட்டாயம் கோடை உழவு செய்தால் பயிருக்குத் தேவையான மண் வளத்தைக் காக்க முடியும். மேலும், மண் பரிசோதனை செய்து வேளாண் அலுவலர்களின் பரிந்துரைப்படி உரம் இடவேண்டும் என்றார் அவர்.

## <u>"குறுவை சிறப்புத் திட்டத்தில் பயன்பெறுவோர் புதியவர்களாக இருக்க வேண்டும்'</u>

**திருவாரூர்**:

குறுவை சாகுபடி சிறப்புத் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் புதியவர்களாக

இருக்கும் வகையில் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றார் வேளாண்மைத் துறை முதன்மைச் செயலர் சந்தீப் சக்சேனா.

திருவாரூர் ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை, திருவாரூர் ஆட்சியர் எம். மதிவாணன் தலைமையில் நடைபெற்ற, திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி பணிகள் மேற்கொள்வது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

தமிழகத்தில் குறுவை சாகுபடி மேற்கொள்ள 12 மணி நேரம் மும்முனை மின்சாரம், 100% மானியத்தில் பிவிசி குழாய்கள் உள்ளிட்ட பல்வேறு சிறப்புத் திட்டங்களை தமிழக அரசு அறிவித்துள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் 36,000 ஹெக்டேர், நாகையில் 35,000 ஹெக்டேர், கடலூரில் 35,000 ஹெக்டேரில் குறுவை நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. 100% மானியத்தில் பிவிசி குழாய், சமுதாய நாற்றாங்கால், களையெடுக்கும் கருவி உள்ளிட்டவை வழங்க திருவாரூருக்கு ரூ. 9.68 கோடி, நாகைக்கு ரூ. 8.84 கோடி, கடலூருக்கு ரூ. 2.73 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை 2,201 ஹெக்டேரிலும், நாகையில் 10,809 ஹெக்டேரிலும், கடலூரில் 2,887 ஹெக்டேரிலும் குறுவை பணிகள் நடைபெற்றுள்ளன. மேலும் திருவாரூர் மாவட்டத்தில் 7,610 ஹெக்டேரிலும், நாகையில் 18,210 ஹெக்டேரிலும், கடலூரில் 6,840 ஹெக்டேரிலும் நாற்று தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

வேளாண் அலுவலர்கள் குறுவை சிறப்புத் திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகள் புதியவர்களாக இருக்கும் வகையில் தேர்வு செய்ய வேண்டும். கடந்த ஆண்டு சிறப்புத் திட்டத்தில் பயன்பெற்றவர்களை மீண்டும் தேர்வு செய்யக் கூடாது என்றார் சந்தீப் சக்சேனா.

கூட்டத்தில் வேளாண் இயக்குநர் மு. ராசேந்திரன், திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலர் பு. மணிமாறன், வேளாண்மை பொறியியல் துறை முதன்மை பொறியாளர் செந்தில் மற்றும் திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்ட வேளாண் அலுவலர்கள், விவசாயிகள் பங்கேற்றனர்.

## மீன்வளம் தொடர்பான புதிய கண்டுபிடிப்புகளுக்கு விருது

**தூத்துக்குடி**:தூத்துக்குடியில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போரின் புதிய கண்டுபிடிப்புக்கு விருது வழங்கப்பட்டது.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழத்தின் நிறுவன நாள் விழா தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. விழாவின்போது தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன் உற்பத்தியை பெருக்குவதற்கான திட்டமிடுதல் பற்றிய ஆலோசனைக் கூட்டமும், மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போரின் புதிய கண்டுபிடிப்புக்கான விருது வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். நாடு முழுவதுமிருந்து 36 பேர் பங்கேற்ற போட்டியில் இருந்து 5 சிறந்த கண்டுபிடிப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி கொம்புதுறையைச் சேர்ந்த ஜான்சன், வசந்த ராமகிருஷ்ணன், சீர்காழியைச் சேர்ந்த இளஞ்செழியன், சூரியகுமார், அந்தமான் நிக்கோபார் தீவுகளைச் சேர்ந்த நசீர் ஹீசைன், சென்னையைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் ஆகியோருக்கு பரிசுத் தொகையாக தலா ரூ. 3000 மற்றும் சான்றிதழ்களை துணைவேந்தர் வழங்கினார்.

விழா சிறப்பு மலரை இந்திய அறிவியல் வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் முன்னாள் உதவி பொது இயக்குநர் வி.வி. சுகுனன் வெளியிட, முதல் பிரதியை சென்னை மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு நிலையத்தின் முன்னாள் முதன்மை விஞ்ஞானி திருநாவுக்கரசு பெற்றுக்கொண்டார். நிகழ்ச்சியில், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) கோ. சுகுமார், மீன்பதன தொழில்நுட்பத் துறையின் பேராசிரியர் து. சுகுமார், உள்நாட்டு மீன்வளப்புத் துறையின் பேராசிரியர் ஸ்டீபன் சம்பத்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## **தினமலர்**

**<u>மாம்பழ சீஸன் களை கட்டியது வாழைத்தார் விலை வீழ்ச்சி</u>**

**வாழப்பாடி**: முகூர்த்தம் மற்றும் விசேஷ நாட்கள் இல்லாததாலும், மாம்பழம் சீஸன் உச்சத்தை தொட்டதாலும், வாழைத்தார் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

வாழப்பாடி பகுதியில் வெள்ளாறு, வசிஷ்ட நதியின் ஆற்றுப்படுகை கிராமங்களிலும், பாப்பநாயக்கன்பட்டி கரியகோயில் அணை, புழுதிக்குட்டை ஆணைமடுவு அணை பாசன வசதி பெறும் கிராமங்களிலும், 1,000 ஏக்கர் பரப்பளவில் வாழை பயிரிடப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்ட எல்லை பகுதியில், 2,000 ஹெக்டர் பரப்பளவில், வாழை பயிரிடப்பட்டுள்ளது. பூவன், தேன்வாழை, நேந்திரம், மோரீஸ், மலைவாழை, மொந்தன், ரஸ்தாளி,செவ்வாழை, பச்சைநாடன் போன்ற வாழைத்தார்களை, வாழப்பாடி பஸ் ஸ்டாண்ட் பகுதியில் கூடும், தினசரி காய்கறி மார்க்கெட்டுக்கு கொண்டு வந்து விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். சேலம் மாவட்டத்தை சேர்ந்த வியாபாரிகள், வாழப்பாடி தினசரி மார்க்கெட்டுக்கு வந்து வாழைத்தார்களை கொள்முதல் செய்கின்றனர்.

முகூர்த்த நாட்கள் உள்பட விசேஷ தினங்கள் இல்லாததால், வாழைப்பழத்துக்கு மவுசு குறைந்துள்ளது. மேலும், மாம்பழம் சீஸன் உச்சகட்டத்தை எட்டியுள்ளதால், வாழைத்தார்களின் விலையில் வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த மாதம் 700 ரூபாய் வரை விற்கப்பட்ட வாழைத்தார் தற்போது, 500 ரூபாய்க்கும், 500 ரூபாய் வரை விலை போன வாழைத்தார், 300 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. விலை குறைவால் வாழை விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்

**<u>மானிய விலை சோலார் மோட்டார்; விவசாயிகள் அதிக ஆர்வம்</u>**

**பொன்னேரி** : அரசு மானிய விலையில் பெறப்பட்ட சோலார் மற்றும் ஆழ்துளை மோட்டார் பயனுள்ளதாக இருக்கிறது' என, விவசாயி மகிழ்ச்சியுடன் கூறி உள்ளார்.

பொன்னேரி, வேளாண்மை பொறியல் துறை சார்பில், மானிய விலையில், பஞ்செட்டி, சின்னகாவணம், தேவராஞ்சேரி, லட்சுமிபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்த, 19 விவசாயிகளுக்கு மானிய விலையில் சோலார் மின்மோட்டார்கள் வழங்கப்பட்டு உள்ளன. ஒவ்வொன்றும், ஐந்து குதிரை திறன் கொண்ட ஆழ்துளை மோட்டார்கள் இயங்கும் வகையில், 17 பேனல்களுடன் சோலார்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அவற்றின் மூலம் கிடைக்கும், 300 முதல், 340 வோல்ட் மின்சாரத்தை கொண்டு, மூன்று ஏக்கர் விவசாய நிலத்திற்கு நீர் பாய்ச்ச முடிகிறது.

இதுகுறித்து, பொன்னேரி அடுத்த, சின்னகாவணம் பகுதியைச் சேர்ந்த விவசாயி தாரகராமன் கூறியதாவது:நான்கு லட்சம் ரூபாய் மதிப்புள்ள சோலார் சிஸ்டத்தை, மானிய விலையில், 93 ஆயிரம் ரூபாய்க்கு அரசு வழங்கியது. அதில் சோலார் சிஸ்டம், ஐந்து குதிரை திறன் கொண்ட ஆழ்துளை மோட்டார், 160 அடி பிளாஸ்டிக் உருளை ஆகியவை இருக்கும்.தினமும், காலை, 7:00 மணி முதல், மாலை, 5:00 மணி வரை, மோட்டார் இயங்குகிறது. தானியங்கி சுவிட்ச் உள்ளதால், சூரிய வெளிச்சம் குறையும் நேரங்களில் தானதாக அணைந்து விடும். மீண்டும் வெளிச்சம் கிடைத்தவுடன், இயங்க துவங்கும்.மேலும், மின்சாரத்தை நம்பி இருக்காமல், சோலார் மூலம் ஆழ்துளை மோட்டார் இயங்குவதால், விளை நிலங்களுக்கு சிரமமின்றி தண்ணீர் பாய்ச்ச முடிகிறது. விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இந்த சோலார் சிஸ்டம் அமைந்து உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## வரும் 27ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**ஈரோடு**: ஈரோடு மாவட்டத்தில், வேளாண் குறைதீர் கூட்டம், வரும், 27ம் தேதி கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நடக்க உள்ளது.

கலெக்டர் சண்முகம் தலைமை வகிக்கிறார். அன்று காலை, 11 முதல், 11.30 மணி வரை மனுக்கள் பெறுதல், 11.30 முதல், 12.30 மணி வரை விவசாய சங்க

பிரதிநிதிகள், விவசாயம் தொடர்பான தங்கள் பகுதி பிரச்னைகள், கருத்துக்களை தெரிவித்தலும், மதியம், 12.30 முதல், 1.30 மணி வரை அலுவலர்கள் விளக்கம் தெரிவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் பங்கேற்று, பயன்பெறும்படி, கலெக்டர் சண்முகம் கேட்டுக்கொண்டார்.

**"விவசாய உற்பத்தியை பெருக்கணும்' நபார்டு உதவி பொது மேலாளர் பேச்சு**

**குளித்தலை**: ""கரூர் மாவட்டத்தில், விவசாயம் சார்ந்த பெண்களைக் கொண்டு, இயங்கும் மகளிர் உழவர் மன்றத்தினர், புதிய தொழில்நுட்பங்களை கற்றுத் தேர்ந்து அதன் மூலம் விவசாய உற்பத்தியை பெருக்க வேண்டும்," என நெய்தலூரில் நடந்த முகாமில் நபார்டு உதவி பொது மேலாளர் பேசினார்.

கரூர் மாவட்டம், தோகைமலை ஒன்றியம், நெய்தலூரில் செயல்பட்டு வரும் தென்றல் மகளிர் உழவர்மன்றத்தின், இரண்டம் ஆண்டு துவக்க விழா மற்றும் அடிப்படை கருத்தாக்கம் மற்றும் திறன்வளர்ப்பு பயிற்சி முகாம் நடந்தது. முகாமிற்கு, மன்றத்தலைவர் இளஞ்சியம் தலைமை வகித்தார். இதில், உழவர்மன்றத் தலைவர்கள் சந்திரா, வளர்மதி, வீரமணி, போதும்பொண்ணு, சித்ரா முன்னிலை வகித்தனர். முகாமில், நபார்டு உதவி பொது மேலாளர் பார்த்திபன் பேசியதாவது:

கரூர் மாவட்டத்தில் மழைவளம் குறைந்து போனதற்கு, மரங்கள் இல்லாதது காரணம். மரங்கள் வளர்ப்பை, ஒரு இயக்கமாக மகளிர் உழவர்மன்றங்கள் மேற்கொண்டு மரங்களை நட்டு, வளர்க்க வேண்டும்.

கரூர் மாவட்டத்திலேயே முதல் முறையாக விவசாய தொழில் செய்து வரும் பெண்களைக் கொண்டு, உழவர்மன்றங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இம்மன்றத்தினர், விவசாயத் தொழிலில் உள்ள புதிய தொழில்நுட்பங்களை எஸ்.கே.வி.கே, கடவூர் வானகம், மற்றும் வேளாண்மைத்துறை மூலம் கற்று, விவசாய உற்பத்தியை பெருக்க வேண்டும். அனைத்து மகளிர் உழவர்மன்றங்கள், ஒருங்கிணைந்து கூட்டமைப்பாக உருவாகி, விவசாயத் தொழிலில் சாதனை படைக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். நபார்டு உழவர்மன்றத் தலைவர்கள் ராஜராஜசோழன் மன்றம் கண்ணதாசன், மருதம் மன்றம் செல்லமுத்து, நெய்தலூர் ஐ.ஓ.பி., முதுநிலை மேலாளர் விவேகானந்தா, வேளாண் அலுவலர்

ராஜேஸ் உட்பட பலர் பேசினர். சிநேகிதி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கோமளா நன்றி கூறினார்.

**<u>குறுவை சாகுபடிக்கு விவசாயிகள் தேர்வு : சந்தேகம் கிளப்பிய விவசாயிகள்</u>**

**திருவாரூர்**: "குறுவை சாகுபடிக்கான விவசாயிகள் தேர்வு, வெளிப்படையாக நடைபெறவில்லை,' என்று திருவாரூரில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் முதன்மை செயலாளரிடம், விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர். திருவாரூர், நாகப்பட்டிணம், கடலூர் மாவட்டங்களில் குறுவை சாகுபடியை ஊக்குவிக்க, வேளாண்துறை சார்பில், விவசாயிகளுடனான ஆலோசனை கூட்டம் திருவாரூர் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.

கலெக்டர் மதிவாணன் தலைமையில் நடந்த கூட்டத்தில், தமிழக அரசின் முதன்மை செயலர் சந்தீப்சேனா பேசியதாவது:
காவிரி டெல்டா மாவட்டங்களில், குறுவை சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில், தமிழக முதல்வர் பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்துள்ளார். குறிப்பாக, 12 மணி நேர தடையில்லா மும்முனை மின்சாரம், பாசனத்திற்கு கொண்டு செல்லப்படும் நீர் வீணாகாமல் இருப்பதற்காக, 100 சதவீத மானியத்தில், ஒருவருக்கு, 600 அடி நீளத்தில் பிவிசி குழாய்கள், 7,000 விவசாயிகளுக்கு வழங்குவது, 100 சதவீத மானியத்தில் நெல் நடவு இயந்திரங்கள் மற்றும் களை எடுக்கும் கருவிகள் வழங்குவது, சமுதாய நாற்றாங்கால் அமைத்து நாற்றுகள் வழங்குவது, மற்றும் 100 சதவிகித மானியத்தில், உயிர் உரங்கள் வழங்குவது, என டெல்டா மாவட்டங்கள் அனைத்துக்கும், 32 கோடியே, 9 லட்சம் நிதியை முதல்வர் ஒதுக்கியுள்ளார்.
இதற்கான பயனாளிகள் தேர்வும் முடிந்துள்ள நிலையில், விவசாயிகளின் கருத்துகளை கேட்டறியும்படி, முதல்வர் உத்திரவிட்டுள்ளதால், ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. இதில், விவசாயிகள் தங்களது கருத்துகளை தெரிவித்தால், அந்த கருத்துக்கள் அனைத்தும் முதல்வரிடம் தெரிவிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து, விவசாயிகள் பேசுகையில், தமிழக அரசு அறிவித்துள்ள, 12 மணி நேரம் தடையில்லா மும்முனை மின்சாரம் முழுமையாக கிடைக்காததால், சாகுபடி செய்யப்பட்டுள்ள குறுவை பயிருக்கு, உரிய நீர் பாய்ச்ச முடியாத நிலை உள்ளது. குறுவை சாகுபடி முடிந்து விட்டதால், குறுவை சாகுபடிக்கான அரசின் சமுதாய நாற்றாங்கால் தேவையற்றது. கடந்த ஆண்டில், வேளாண்துறை மூலம் விற்பனை செய்யப்பட்ட விதை நெல்களில் கலப்பு அதிகமாக இருந்ததால், மகசூல் பாதித்தது. கடந்த ஆண்டில், ஆறுகளில் மராமத்து பணி நடைபெறுவதாக கூறி, மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்பட்ட நீர், கொள்ளிடத்தில் விட்டு, வீணாக கடலில் கலந்தது. எனவே, நடப்பாண்டில், ஆறுகளில் தூர் வாரும் பணி மற்றும் மராமத்து பணிகளை முன் கூட்டியே முடிக்க வேண்டும். ஆண்டுக்கு, 200 கோடி அளவில் நிதி ஒதுக்கீடு செய்து ஆறுகளை தூர் வார வேண்டும். காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள ஏரி மற்றும் குளங்களையும் தூர் வார வேண்டும். மேலும், குறுவை சாகுபடிக்காக, 32.9 கோடி மானியம் வழங்குவதற்கான, 7,000 விவசாயிகள் தேர்வு வெளிப்படையாக நடைபெறவில்லை. கடந்த ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளே மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். எனவே, தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளிகள் பட்டியலை உடனடியாக வெளியிட வேண்டும், என்று தெரவித்தனர். முன்னதாக திருவாரூர், நாகை, கடலூர் மாவட்டங்களை சேர்ந்த வேளாண்துறை, பொது பணித்துறை, கூட்டுறவு துறை உட்பட பல்வேறு துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடந்தது.

**<u>குமரியில் சாரல் மழை</u>**

**நாகர்கோவில்** : குமரி மாவட்டத்தில் தென் மேற்கு பருவமழை ஜூன் முதல் வாரத்தில் தொடங்க வேண்டும். இரண்டு வாரம் கடந்த நிலையில் நேற்று முதல் மாவட்டத்தில் சாரல் மழை பெய்ய தொடங்கியுள்ளது, நாகர்கோவில் பகுதியில் நேற்று காலை முதலே வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டது. பின்னர் இடைவெளி விட்டு சாரல் மழை பெய்ய தொடங்கியது. இதுபோல கொட்டாரம், மயிலாடி, கன்னியாகுமரி, புத்தன்அணை, கன்னிமார், ஆரல்வாய்மொழி ஆகிய

இடங்களில் சாரல் மழை பெய்தது. இந்த சாரல் மழை கன்னிப்பூ விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

## மார்க்கெட் கமிட்டிக்கு மக்காசோளம், எள் வரத்து

**சின்னசேலம்**: சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காசோளம், எள் வரத்து அதிகரித்தது. சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று 45 மக்காசோளம் மூட்டைகள், 20 மூட்டை எள் வரத்து இருந்தது. மக்காசோளம் அதிகபட்சம் ரூ.1,337, குறைந்தபட்சம் ரூ.1,287, எள் அதிகபட்சம் ரூ.5,986, குறைந்தபட்சம் ரூ.5,057க்கு விலை போனது. கடந்த வாரம் 600 மக்காசோளம் மூட்டைகள் 7 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. 50 எள் மூட்டைகள் 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் கொள்முதல் செய்யப்பட்டன.

## பயிர்க்கடன் வழங்க ஜூலை 1 முதல் முகாம்

**பெரம்பலூர்**: பெரம்பலூர் மாவட்டத்தில், ஜூலை, 1 ம் தேதி முதல், 21ம் தேதி வரை பயிர் கடன் வழங்கும் முகாம் நடக்கிறது.

பெரம்பலூர் தாலுகாவில், 1ம் தேதி எசனை, அலங்கிழி, குரும்பலூர் (தெ), 2ம் தேதி கீழக்கரை, குரும்பலூர் (வ), 3ம் தேதி எளம்பலூர், மேலப்புலியூர் (கி), 4ம் தேதி செங்குணம், மேலப்புலியூர் (மே), 7ம் தேதி துறைமங்கலம், லாடபுரம் (மே), 8ம் தேதி பெரம்பலூர் (தெ), லாடபுரம் (கி), 9ம் தேதி பெரம்பலூர் (வ), அம்மாபாளையம், 10ம் தேதி அரணாரை (வ), களரம்பட்டி, 11ம் தேதி அரணாரை (தெ), சத்திரமனை, 14ம் தேதி புதுநடுவலூர், பொம்மனப்பாடி, 15ம் தேதி சிறுவாச்சூர், 16ம் தேதி நொச்சியம், கல்பாடி (வ), 17ம் தேதி கல்பாடி (தெ), அயிலூர் ஆகிய கிராமங்களில் நடக்கிறது.

குன்னம் தாலுகாவில், 1ம் தேதி நன்னை (கி), திருமாந்துறை, ஓலைப்பாடி (கி), 2ம் தேதி நன்னை (மே), பென்னகோணம்(வ), ஓலைப்பாடி (மே), 3ம் தேதி பெருமத்தூர் (வ), பென்னகோணம் (தெ), பரவாய் (மே), 4ம் தேதி பெருமத்தூர் (தெ), ஆண்டிகுரும்பலூர், வடக்கலூர், பரவாய் (கி), 7ம் தேதி சிறுமத்தூர், ஒகளூர் (மே), எஸ்.ஆடுதுறை, புதுவேட்டக்குடி, 8ம் தேதி கீழப்புலியூர் (வ), ஒகளூர் (கி),

துங்கபுரம் (வ), 9ம் தேதி கீழப்புலியூர் (தெ), அத்தியூர் (வ), துங்கபுரம் (தெ), 10ம் தேதி எழுமூர் (மே), அத்தியூர், காடூர் (வ) ஆகிய கிராமங்களில் நடக்கிறது.

ஜூலை, 11ம் தேதி எழுமூர் (கி), மழவராயன்நல்லூர், கிழுமத்தூர் (வ), காடூர் (தெ), 14ம் தேதி அசூர், கிழுமத்தூர் (தெ), பெரியவெண்மணி (மே), கொளப்பாடி, 15ம் தேதி சித்தளி (கி), அகரம்சீகூர், வரகூர், 16ம் தேதி சித்தளி (மே), வசிஷ்டபுரம், குன்னம், 17ம் தேதி பேரளி (வ), கீழப்பெரம்பலூர், பெரியம்மாபாளையம், 18ம் தேதி பேரளி (தெ), வயலப்பாடி, பெரியவெண்மணி (கி), 21ம் தேதி ஒதியம் கிராமத்தில் நடக்கிறது.

ஆலத்தூர் தாலுகாவில், 1ம் தேதி மேலமாத்தூர், நாரணமங்கலம், வரகுபாடி, 2ம் தேதி அழகிரிபாளையம், நாட்டார்மங்கலம், காரை (கி,மே), 3ம் தேதி தொண்டபாடி, மாவிலங்கை, 4ம் தேதி ஆதனூர் (வ), சிறுவயலூர், தெரணி, 7ம் தேதி ஆதனூர் (தெ), நக்கசேலம், புது அம்மாபாளையம், அயனாபுரம், 8ம் தேதி கூத்தூர், எலந்தலப்பட்டி, கொளக்காநத்தம், 9ம் தேதி கூடலூர், டி.களத்தூர், கொளத்தூர் (மே), 10ம் தேதி புஜங்கராயநல்லூர், கண்ணப்பாடி, கொளத்தூர் (கி) ஆகிய கிராமங்களில் நடக்கிறது.

ஜூலை, 11ம் தேதி நொச்சிக்குளம், தேனூர், சாத்தனூர், 14ம் தேதி திம்மூர், இரூர், கொட்டரை, 15ம் தேதி சில்லக்குடி (வ), பாடாலூர் (கி), சிறுகன்பூர் (கி), 16ம் தேதி சில்லக்குடி (தெ), பாடாலூர் (மே), சிறுகன்பூர் (மே), 17ம் தேதி ஜெமீன்ஆத்தூர், செட்டிகுளம் ஆகிய கிராமங்களில் நடக்கிறது.

வேப்பந்தட்டை தாலுகாவில், 1ம் தேதி உடும்பியம், பெரியவடகரை, தொண்டப்பாடி, 2ம் தேதி பூலாம்பாடி (கி), நூத்தப்பூர் (தெ), நெய்குப்பை, 3ம் தேதி பூலாம்பாடி (மே), நூத்தப்பூர் (வ), அனுக்கூர், 4ம் தேதி வெங்கனூர், பில்லங்குளம், பிரம்மதேசம், 7ம் தேதி தழுதாழை, கை.களத்தூர் (மே), மேட்டுப்பாளையம் (தெ), 8ம் தேதி அரும்பாவூர், கைகளத்தூர் (கி), மேட்டுப்பாளையம் (வ), 9ம் தேதி மலையாளப்பட்டி, காரியானூர், பிம்பலூர், 10ம் தேதி தொண்டமாந்துரை (மே), பசும்பலூர்(வ), வி.களத்தூர் ஆகிய கிராமங்களில் நடக்கிறது.

ஜூலை, 11ம் தேதி தொண்டமாந்துறை (கி), பசும்பலூர் (தெ), பேரையூர், 14ம் தேதி வெங்கலம் (மே), பாண்டகப்பாடி, எறையூர், 15ம் தேதி வெங்கலம் (கி), திருவாளந்துறை, அகரம், தேவையூர் (வ), 16ம் தேதி வேப்பந்தட்டை(வ),

தேவையூர் (தெ), 17ம் தேதி வேப்பந்தட்டை (தெ), வாலிகண்டபுரம், 18ம் தேதி வெண்பாவூர் ஆகிய கிராமங்களில் பயிர்க்கடன் வழங்கும் முகாம் நடக்கிறது. இந்த முகாம் நடக்கும் இடங்களிலேயே, பயிர்க்கடன் பெற தேவையான கம்ப்யூட்டர் சிட்டா, அடங்கல் ஆகியவை, வருவாய்த்துறை அலுவலர்களால் வழங்கப்படும்.

**குறைந்த விலையில் அன்னாசிப்பழம்**

**ராஜபாளையம்** : கேரளாவில் அன்னாசிப்பழ சீசன் மார்ச்சில் துவங்கி, ஜுலை வரை இருக்கும். தற்போது, அங்கு விளைச்சல் அதிகமாகி உள்ளது. இடுக்கி மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு, மினிலோடு வாகனங்களில் தமிழகத்தில் இருந்து பழ வியாபாரிகள் செல்கின்றனர். குறைந்த விலைக்கு பழங்களை வாங்கி, ராஜபாளையம் மற்றும் பல பகுதிகளில் விற்பனையில் ஈடுபடுகின்றனர். ராஜபாளையம் முடங்கியார் ரோட்டில், நேற்று பழம் 10 முதல் 15 ரூபாய்க்கு விற்றனர்.

**தினம் 25,000 லிட்டர் பால் கொள்முதல்**

**விருதுநகர்** : ""விருதுநகர்மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில், உறுப்பினர்களிடம் இருந்து, தினமும் 25 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது,'' என, அதன் பெருந்தலைவர் பா.கண்ணன் தெரிவித்தார்.
விருதுநகர்மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு வரும் பாலின் அளவு மற்றும் தரத்தை உயர்த்துவதற்கான கூட்டம், ஸ்ரீவி.,பால்பண்ணை வளாகத்தில் நடந்தது. தலைமை வகித்த அதன்

ஒன்றிய பெருந்தலைவர் பா.கண்ணன் பேசுகையில்,"" விவசாயிகளுக்கு 1,511 அரசின் இலவச கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்மூலம் தினமும் 3,680 லிட்டர் பால் கிடைக்கிறது. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் 5,192 உறுப்பினர்கள், அவர்களிடம் 10,055 கறவை மாடுகள் உள்ளன.

கடந்தாண்டு ஜூனில் உறுப்பினர்களிடம் இருந்து தினமும் 14 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது ஒருநாளைக்கு 25 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. தரத்தின் அடிப்படையில் உறுப்பினர்களுக்கு லிட்டர் பாலுக்கு 23 ரூபாய் தரப்படுகிறது. அதில், கொழுப்பு 4.2 சதவீதம் இதரசத்துகள் 8.3 சதவீதம் உள்ளன. மாவட்ட பயன்பாட்டிற்கு போக மீதம் பால் பதப்படுத்தப்பட்டு சென்னைக்கு அனுப்பப்படுகிறது. வாரந்தோறும் பால் உற்பத்தியாளர்களுக்கு 54 லட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத்தொகை எதுவுமில்லை," என்றார். ஒன்றிய துணைத்தலைவர் கே.கண்ணன், பொதுமேலாளர் சேகர், துணைமேலாளர்(பால் உற்பத்தி) வீரராகவன், பால் உற்பத்தியாளர்கள், களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## <u>தக்காளி உற்பத்தி குறைவு: விலை அதிகரிக்க வாய்ப்பு</u>

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில், தக்காளி உற்பத்தி குறைந்துள்ளதால், சந்தைக்கு வரத்து குறைந்து உள்ளது. இதனால், தக்காளி விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக, வியாபாரிகள் தெரிவித்தனர்.

தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு, காரிமங்கலம் உட்பட மாவட்டம் முழுவதும், 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் தக்காளி சாகுபடி செய்யப்பட்டு வந்தது. கடந்த சில மாதங்களாக தக்காளிக்கு, சந்தையில் போதிய விலை இல்லாததாலும், போதிய மழை மற்றும் பாசன வசதி இல்லாததாலும், விவசாயிகள் தக்காளி சாகுபடியை குறைத்துள்ளனர்.

இதனால், கடுமையாக குறைத்திருந்த, தக்காளி விலை குறிப்பிட தக்க வகையில் உயர்ந்து வந்தது. இந்நிலையில், கடந்த மாத இறுதியில், பெய்த தொடர்மழையின் காரணமாக தக்காளி வரத்து அதிகரித்ததால், விலையில் லேசான சரிவு ஏற்பட்டது. தொடர்ந்து தக்காளி வரத்து சீரான வகையில் மட்டும் இருந்தது.

ஆனாலும், தக்காளி விலையில் தொடர்ந்து முன்னேற்றம் இன்றி காணப்பட்டு வந்தது. இதனால், தற்போது, பாலக்கோடு தக்காளி மார்க்கெட்டுக்கு வரும் தக்காளிகள், காலை, 11 மணிக்குள் விற்பனை செய்யப்பட்டு விடுகிறது. நேற்று

ஒரு கிலோ தக்காளி பாலக்கோடு, தக்காளி மார்க்கெட்டில், 11 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

இதுகுறித்து, மாரண்டஹள்ளியை சேர்ந்த தக்காளி வியாபாரி போத்து கூறியதாவது:

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு தக்காளி மார்க்கெட்டில் இருந்து, சென்னை, மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கோவை, கேரளா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு, தக்காளி அனுப்பப்பட்டு வருகிறது. சில தினங்களாக தக்காளி வரத்து குறைந்திருந்த நிலையிலும், விலை திடீர் என, 17 ரூபாயில் இருந்து, 11 ரூபாயாக குறைந்தது.

இதனால், பாலக்கோடு தக்காளி மார்க்கெட்டில், வழக்கத்தை விட, காலை, 10 மணி முதல், 11 மணிக்குள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த மாத இறுதியில் பெய்த மழையின் காரணமாக, தற்போது, தக்காளி செடிகளில், அதிகளவு பூக்கள் பூத்து வருகிறது. இதனால், சில தினங்களில் தக்காளி உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளதுடன், தொடர்ந்து திருமண மற்றும் கோவில் விழாக்கள் உள்ளிட்ட சீஸன் துவங்க உள்ளதால், தக்காளி விலை அதிகரிக்க கூடிய வாய்ப்பு உள்ளது, என்றார்.

**<u>துவரை விளைச்சல் சாகுபடி குறைவால் பெரும் கவலை</u>**

**தர்மபுரி**: தர்மபுரி மாவட்டத்தில், துவரை சாகுபடியில், போதிய அளவு விளைச்சல் கிடைக்காததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், இறவை மற்றும் மானாவாரியில், சாகுபடி செய்யப்படும் பயிர்களில் துவரை முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டம் முழுவதும் இறவை மற்றும் மானாவாரியாக, ஆறாயிரம் ஹெக்டேருக்கு மேல் துவரை சாகுபடி செய்யப்பட்டிருந்து. தர்மபுரி மாவட்டத்தில் போதிய பருவமழை இல்லாததால், மானாவாரியாக சாகுபடி செய்யப்பட்டிருந்த, துவரைக்கும், நிலத்தடி நீர் கேள்வி குறியானதால், இறவை பாசனத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த துவரைக்கும், மாவட்டத்தின் பல பகுதிகளில் போதிய தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டது. இதனால், துவரை செடிகளில் போதிய விளைச்சல் இன்றி பாதிக்கப்பட்டது. மாவட்டத்தில், கடந்த, நான்கு மாதங்களுக்கு முன், சாகுபடி செய்யப்பட்ட துவரை, தற்போது அறுவடை நடந்து வருகிறது. சின்னரெட்டிஹள்ளியை சேர்ந்த விவசாயி

ஸ்டீபன் கூறியது: கடந்த, 10 ஆண்டுகளாக, இறவை மற்றும் மானாவாரியாக, மூன்று ஏக்கரில் துவரை சாகுபடி செய்து வருகிறேன். கடந்த, இரு ஆண்டுகளாக துவரைக்கு சந்தையில் நல்ல விலை கிடைத்தது. இதனால், இந்த சீஸனில் கூடுதலாக, இரு ஏக்கர் பரப்பளவில் துவரை சாகுபடி செய்திருந்தேன். போதிய பருவ மழையில்லாததால், இறவை மற்றும் மானாவாரியாக சாகுபடி செய்திருந்த, துவரை செடிகளில், மகசூல் வெகுவாக குறைந்துள்ளது. துவரைக்கு சந்தையில் நல்ல விலையிருந்தும், போதிய விளைச்சல் இல்லாததால், விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட துவரை விவசாயிகளுக்கு, மாவட்ட நிர்வாகம் உரிய நிவாரணம் வழங்க வேண்டும், என்றார்.

<u>**கால்நடைகளுக்கு மானிய விலை தீவனம் வினியோகம்**</u>

**அரூர்**: தர்மபுரி மாவட்டம் அரூரில், மானிய விலையில் உலர் தீவனங்களை பெறலாம் என, விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில், விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போருக்கு, தமிழக அரசு மானிய விலையில் உலர் தீவனம் வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், தர்மபுரி மாவட்டம் அரூரில், கால்நடைகளுக்கான உலர் தீவனங்களை மானிய விலையில் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் அர்த்தனாரி துவக்கி வைத்து, விவசாயிகளுக்கு மானிய விலையில் உலர்தீவனங்களை வழங்கினார்.

அப்போது, அவர் பேசியதாவது:

அரூர் யூனியனை சேர்ந்த விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர், அரசு வழங்கும் மானிய விலையிலான உலர் தீவனங்களை பெறலாம். ஒரு கிலோ தீவனம், 2 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. உலர் தீவனம் பெற விரும்பும் விவசாயிகள், அரூர், கொங்கவேம்பு, கோட்டப்பட்டி, கீரைப்பட்டி, கோபிநாதம்பட்டி கூட்ரோடு, தீர்த்தமலை, மருதிப்பட்டி உள்ளிட்ட இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களை அணுகி, தங்களது பெயர்களை பதிவு செய்து அடையாள அட்டை பெறலாம். வாரத்துக்கு, ஒரு கால்நடைக்கு, 21 கிலோ வீதம், மொத்தம், 105 கிலோ உலர் தீவனங்களை விவசாயிகள் பெறலாம். இந்த உலர் தீவனங்கள் அரூர் அரசு கால்நடை மருந்தக வளாகத்தில் விற்பனை செய்யப்படுகிறது. இதனை, விவசாயிகள் வாங்கி பயன்பெறலாம், என்றார்.

**<u>கேழ்வரகு பயிரில் குலைநோய் கி.கிரியில் விவசாயிகள் பாதிப்பு</u>**

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மானாவாரி நிலங்களில், சாகுபடி செய்யப்பட்டுளள கேழ்வரகு பயிரில் குலைநோய் தாக்குதல் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஓசூர், ராயக்கோட்டை, தேன்கனிக்கோட்டை, வேப்பனப்பள்ளி, பர்கூர் உள்ளிட்ட பகுதிகளில், மானாவாரி நிலங்களில், அதிக அளவில் கேழ்வரகு சாகுபடி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ளவர்கள், பெரும்பாலோனார் கேழ்வரகை முக்கிய உணவாக பயன்படுத்தி வருகின்றனர். இங்கு, சாகுபடி செய்யப்படும் கேழ்வரகு, தமிழகத்தில் உள்ள வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நடப்பாண்டில் மானாவாரியில், 65 ஆயிரம் ஹெக்டேரில் கேழ்வரகு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தற்போது கடும் பனிப்பொழிவுடன் கூடிய சீதோஷ்ண நிலை நிலவுதால், கேழ்வரகு பயிரில், குலைநோயின் தாக்குதல் அதிகரித்துள்ளது. பல இடங்களில், 40 சதவீதம் வரை, மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ளது. காற்றின் மூலம் பரவக்கூடிய இந்நோய், கேழ்வரகை மட்டுமல்லாது, கம்பு, கோதுமை, மக்காச்சோளம் போன்ற பயிர்களையும் தாக்கி சேதம் விளைவிக்கும் தன்மை கொண்டது. இந்நோய், நாற்றங்காலில் தாக்கப்பட்டு, இலைகள் சரிந்து, நாற்றுகள் மடிந்து காய்ந்து விடும். இதனால், விளைச்சல் பாதிக்கும்.

இதுகுறித்து, கிருஷ்ணகிரி வேளாண்மை அறிவியல் மைய அதிகாரிகள் கூறியதாவது:

கேழ்வரகில், 30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும், 90 சதவீதத்துக்கும் அதிகமான ஈரப்பதமும் மற்றும் தேவைக்கு அதிகமாக தழைச்சத்து இடுவதால், இந்நோயின் தாக்குதல் அதிகரிக்கும். இதனை கட்டுப்படுத்த, விதைப்பதற்கு உரிய விதைகளை நோய் தாக்காத வயலில் இருந்து எடுக்க வேண்டும். தேவைக்கு அதிகமாக தழைச்சத்து உரங்கள் இடுவதை தவிர்க்க வேண்டும். மேலும், விதை நேர்த்தி செய்வதன் மூலமாகவும் இந்நோயை கட்டுப்படுத்தலாம். ஒரு கிலோ விதைக்கு, கார்பன்டாசிம், இரண்டு கிராம் வீதம் விதைப்பதற்கு குறைந்தது, 24 மணி நேரத்துக்கு முன்னரே கலந்து வைத்திருந்து, பின்னர் விதைக்க வேண்டும்.

மேலும்,ஹெக்டேருக்கு எடிபன்பாஸ், 500 மில்லி அல்லது டிரைசைக்லோசோல், 300 கிராம், இவற்றின் ஏதாவது ஒன்றை நோய் அறிகுறி தென்பட்டவுடன் தெளிக்க வேண்டும். தாக்குதல் அதிகம் தென்பட்டால், 15 நாட்கள் இடைவெளியில் மருந்தை தெளிக்க வேண்டும், என்றார்.

## குறுவை சாகுபடி முன்னேற்பாடு: தஞ்சையில் ஆய்வுக் கூட்டம்

**தஞ்சாவூர்**: தஞ்சை, திருச்சி, அரியலூர் டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடிக்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம், தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட கலெக்டர் சுப்பையன் தலைமை வகித்தார். வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். டெல்டா பகுதிகளில், நடப்பு குறுவை சாகுபடியை அதிகரிப்பதற்காக, அரசு சார்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து முதன்மை செயலாளர் கூறியதாவது, குறுவை சாகுபடி சிறப்பு திட்டத்தில், தஞ்சாவூர் மாவட்டத்தில் வாய்க்கால் பாசனம் மூலம், 13 ஆயிரம் ஹெக்டேர், நிலத்தடி நீர் ஆதாரத்தை வைத்து, 31 ஆயிரம் ஹெக்டேர் குறுவை சாகுபடி செய்ய திட்டமிடப் பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்ட விவசாய குழுக்களுக்கு, 50 நெல் நடவு இயந்திரங்கள் வழங்குவதற்காக, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாய பணிகளுக்கு கடந்த ஜூன், 6ம் தேதி முதல், 12 மணிநேர தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு தேவையான ஆடுதுறை-43,45 ரக நெல் விதைகள், இடுபொருட்கள், உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. குறுவை பருவத்தில் இதுவரை திருந்திய நெல் சாகுபடி முறையில், 5,790 ஹெக்டேரிலும், இயல்பான சாகுபடி முறையில், 3,167 ஹெக்டேரிலும் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**<u>குமரி மாவட்டத்தில் 6400 ஏக்கரில் கன்னிப்பூ நாற்று நடவு சாரல்மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

**நாகர்கோவில்,**

குமரி மாவட்டத்தில் 6400 ஏக்கரில் கன்னிப்பூ நாற்று நடவு ஆகி உள்ளது. பரவலாக பெய்து வரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சாரல் மழை

குமரி மாவட்டத்தில் இம்மாதத்தின் தொடக்கத்திலேயே மழை பெய்யத் தொடங்கியது. எனவே தொடர்ந்து மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்பு மாவட்ட மக்களிடையேயும், விவசாயிகளிடையேயும் இருந்து வந்தது. ஆனால் எதிர்பார்த்தபடி இந்த மழை பெய்யவில்லை. ஒரு சில தினங்களில் மட்டும் லேசான சாரல் மழை விட்டு, விட்டு பெய்து கொண்டிருந்தது. மற்ற நாட்களில் வழக்கம்போல் வெயில் இருந்தது.

இந்தநிலையில் கடந்த சில நாட்களாக குமரி மாவட்டத்தில் பலத்த காற்று வீசியது. அதேசமயம் வெயிலின் அளவு குறைந்ததோடு, வானம் மப்பும், மந்தாரமுமாக காட்சி அளித்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு நாகர்கோவில் உள்ளிட்ட குமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சாரல் மழை பெய்தது. நேற்றும் காலையில் இருந்து மதியம் வரை இருள்சூழ்ந்த மேகக்கூட்டங்களுடன் வானம் காட்சி அளித்தது. மதியம் சுமார் 12.45 மணி அளவில் திடீரென காற்றுடன் சாரல் மழை பெய்யத் தொடங்கியது. இந்த மழை சுமார் 10 நிமிடங்கள் வரை நீடித்தது. அதன்பிறகு மாலையில் சாரல் மழை பெய்தது. நாள் முழுவதும் இதமான சூழ்நிலை நிலவியது.

800 கனஅடி திறப்பு

இதேபோல் நாகர்கோவில், கன்னியாகுமரி, கொட்டாரம், மயிலாடி, களியக்காவிளை, குழித்துறை, மார்த்தாண்டம், குலசேகரம், பேச்சிப்பாறை, பூதப்பாண்டி, மணவாளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று மழை இருந்தது. நேற்று காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் குமரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.) வருமாறு:-

பெருஞ்சாணி- 1.8, கன்னிமார்- 2.8, நாகர்கோவில்- 3, புத்தன் அணை- 1.6 என்ற அளவில் பெய்திருந்தது. பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 125 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 61 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருந்தது. பேச்சிப்பாறை அணையில் இருந்து 495 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையில் இருந்து 253 கன அடி தண்ணீரும் திறந்து விடப்படுகிறது.

கூடுதலாக திறப்பு

தற்போது கன்னிப்பூ நாற்று நடவு செய்யும் பணி ஆங்காங்கே தொடங்கி நடந்து வருவதால் பேச்சிப்பாறை அணையில் இருந்து தண்ணீர் அதிகமாக திறந்து விடப்பட்டு வருகிறது. நேற்று 50 கன அடி தண்ணீர் கூடுதலாக திறக்கப்பட்டுள்ளது. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் குறிப்பாக என்.பி.சானல், தோவாளை சானல், அனந்தனார் சானல், அரசியார் சானல், பி.பி.சானல், திருவிதாங்கோடு சானல் ஆகிய சானல்களில் விடப்பட்டு வருவதாகவும், நெல் நடவு பரப்புக்கு ஏற்ப தண்ணீர் திறப்பின் அளவு கூடுதலாகவோ, குறைத்தோ விடப்படும். தற்போது பெய்யும் மழையின் அளவு குறைவாகத்தான் உள்ளது. என்று பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர்வள ஆதார அமைப்பு) சுப்பிரமணியன் தெரிவித்தார்.

6400 ஏக்கர்

கன்னிப்பூ நாற்று நடவு குறித்து வேளாண்மைத்துறை அதிகாரியிடம் கேட்டபோது, "குமரி மாவட்டத்தில் கன்னிப்பூ சாகுபடி இந்த ஆண்டு 17,500 ஏக்கர் பரப்பில் ஆகும் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் தற்போது பூதப்பாண்டி, அகஸ்தீஸ்வரம், ராஜாக்கமங்கலம், குருந்தங்கோடு, கோழிப்போர்விளை, மேல்புறம் ஆகிய வட்டாரங்களில் 6400 ஏக்கரில் கன்னிப்பூ நெல் நாற்றுகள் நடப்பட்டுள்ளன. இதில் அகஸ்தீஸ்வரம் ஒன்றியத்தில் மட்டுமே 3 ஆயிரம் ஏக்கரில் நெல் நாற்றுகள் நடப்பட்டுள்ளன. தற்போது குமரி மாவட்டத்தில் பெய்து வரும் மழை நெற்பயிருக்கு ஏற்றதாகும். இதனால் இந்த மழை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது" என்றார்.

தினகரன்

**குறுவை சாகுபடியை ஊக்குவிக்க**

**தஞ்சை, மாவட்டத்தில் 29,000 விவசாயிகள் தேர்வு: வேளாண்மைத்துறை செயலாளர் தகவல்**



**தஞ்சை**: தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடியை ஊக்குவிப்பதற்காக இதுவரை 29,000 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்று வேளாண்மைத்துறை செயலாளர் தெரிவித்துள்ளார். ஜூன் 12ல் மேட்டூர் அணை திறக்கப்பட வேண்டும். மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லாததால்

இந்தாண்டும் குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணை திறக்கவில்லை. ஆனாலும் காவிரி டெல்டா மாவட்டங்களில் பம்ப்செட் தண்ணீரை கொண்டு குறுவை சாகுபடிக்கான பணிகள் நடந்து வருகிறது. குறுவை சாகுபடியை ஊக்குவிக்க 12 மணி நேர மும்முனை மின்சாரம், விதை, நாற்றுகள், நெல் நடவு இயந்திரம் உட்பட பல்வேறு உதவி, மானியங்களை அடங்கிய குறுவை தொகுப்பு திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில் தஞ்சை, திருச்சி, அரியலூர் மாவட்டங்களில் குறுவை சாகுபடி முன்னேற்பாடு பணிகள் குறித்து வேளாண்மை துறை செயலாளர் சந்தீப் சக்சேனா தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஆய்வு செய்தார். வேளாண்மைத்துறை இயக்குனர் ராஜேந்திரன், கலெக்டர் சுப்பையன் மற்றும் விவசாயிகள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் வேளாண்மைத்துறை செயலாளர் சந்தீப் சக்சேனா பேசியதாவது: தஞ்சை மாவட்டத்தில் காவிரி நீர் வரும்போது வாய்க்கால் பாசனம் மூலம் 13,000 ஹெக்டேரிலும், நிலத்தடிநீர் ஆதாரம் மூலம் 31,000 ஹெக்டேர் என மொத்தம் 44,000 ஹெக்டேரில் குறுவை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. நெல் நடவு இயந்திரங்கள், பிவிசி குழாய்கள், நாற்றுகள், உரங்கள், உயிர் உரங்கள் வழங்க ரூ.919.4 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயத்துக்காக மும்முனை மின்சாரம் கடந்த 6ம் தேதி முதல் வழங்கப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் இதுவரை குறுவை பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் 5790 ஹெக்டேரிலும், இயல்பான சாகுபடி முறையில் 3167 ஹெக்டேரிலும் என மொத்தம் 8,907 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 22,002 ஹெக்டேரில் நடவு செய்ய நிலம் தயாரிக்கும் பணி நடந்து வருகிறது. குறுவைக்கு தேவையான ஆடுதுறை, 43, 45 நெல் விதைகள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. உரங்களும் தேவையான அளவு உள்ளது. தஞ்சை மாவட்டத்தில் குறுவை தொகுப்பு திட்ட விழிப்புணர்வு முகாம் 354 கிராமங்களில்

நடத்த திட்டமிட்டு 25 கிராமங்களில் நடத்தப்பட்டு 29,593 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். திருச்சியில் 2,320 பயனாளிகளும், அரியலூர் மாவட்டத்தில் 500 பயனாளிகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

**முட்டை விலை அதிகரித்துள்ளது**



**நாமக்கல்**: முட்டை விலை மேலும் உயர்ந்து, 331 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், 'தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு'கூட்டம் நேற்று நடந்தது. பண்ணையாளர்கள், வியாபாரிகள் பங்கேற்று முட்டை விற்பனை நிலவரம் குறித்து விவாதித்து, முட்டை விலையில் 16 காசு உயர்த்த முடிவு செய்தனர். அதன்படி, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 315 காசில் இருந்து 331 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

சத்துணவு முட்டை சப்ளை, கோடைகாலம் முடிந்துள்ளதால் தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை அதிகரிப்பு போன்ற காரணத்தால் முட்டைக்கான தேவை அதிகரித்துள்ளதால் முட்டை விலை

உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். நாமக்கல் மண்டலத்தில் கடந்த 12ம் தேதி முட்டையின் விலை 300 காசாக இருந்தது, 14ம் தேதி 304 காசுகளாவும், 16ம் தேதி 315 காசுகளாகவும் உயர்ந்து தற்போது 331 காசாக அதிகரித்துள்ளது.

**<u>நீடாமங்கலம் அருகே திருந்தியநெல், குறுவை சாகுபடி நடவுப் பணிவேளாண் உற்பத்தி அதிகாரி ஆய்வு</u>**

**நீடாமங்கலம்**, : நீடாமங்கலம் அருகே திருந்திய நெல் சாகுபடி நடவு மற்றும் இயந்திரம் மூலம் குறுவை சாகுபடி நடவுப்பணியை வேண் உற்பத்தி ஆணையர் சந்தீப்சக்ஷேனா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழக முதல்வரின் குறுவை சாகுபடி தொகுப்பு திட்டம் 2014ன்படி சமுதாய நாற்றங்கால், மற்றும் 100 சதவீதம் மானிய உரம், பைப் வழங்கப்பட்டு வருகிறது. டெல்டா மாவட்டமான திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண்மை கோட்டத்தில் 45 ஆயிரம் ஏக்கர் நெல் கோடை சாகுபடி செய்யப்பட்டு இயந்திரம் மூலம் அறுவடை முடியும் நிலையில் உள்ளது. அதேபோல் நீடாமங்கலம் பகுதியில் குறுவை நடவு பம்பு செட் மூலம் தொடங்கியுள்ள நிலையில் நீடாமங்கலம் அருகே நகர் கிராமத்தில் சக்கரவர்த்தி, மோ கன்தாஸ்காந்தி ஆகியோர் 19 ஏக்கர் நிலத்தில் திருந்திய நெல் சாகுபடி நடவு பெண் தொழிலாளர்களை கொண்டும், குறுவை சாகுபடி நடவுப்பணியை இயந்திரம் மூலம் நேற்று தொடங்கினர். இந்த இயந்திர நடவு மற்றும் திருந்திய நெல் சாகுபடி நடவுகளை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை செயலாளர் வேளாண்மைதுறை சந்தீப்சக்ஷேனா பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது விவசாயிகளிடம் நடவு சாகுபடி மற்றும் உற்பத்தி தொடர்பான விளக்கங்களை கேட்டறிந்தார். வேளாண்மை இயக்குனர் ராஜேந்திரன், திருவாரூர் கலெக்டர் மதிவாணன், தலைமை பொறியாளர் செந்தில், தாசில்தார் மதியழகன், வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**திண்டுக்கல்**, : திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் நாளை(வெள்ளி) காலை 10 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது. இதில் கடந்த கூட்டத் தில் அளிக்கப்பட்ட மனுக் கள் மீது விவாதம் நடைபெ றும். கலெக்டர் உள்ளிட்ட விவசாய அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண உள்ளனர். எனவே கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளவும். மனு அளிக்க வரும் விவசாயிகள் இரண்டு நகல்களாக அளிக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

**விவசாயிகளுக்கு அடிப்படை பயிற்சி**

**நாமக்கல்**, : சேந்தமங்கலம் வட்டார விவசாயிகளுக்கு கிராம அடிப்படை பயிற்சி பச்சுடையாம்புதூரில் இன்று(19ம் தேதி) தொடங்கி இரண்டு நாட்கள் நடைபெறுகின்றது. இது குறித்து நாமக்கல் வேளாண்மை துணை இயக்குனர் பாலசுப்பிரமணி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் தமிழ்செல்வன் உத்தரவின்படி, சேந்தமங்கலம் வட்டார விவசாயிகளுக்கு கிராம அடிப்படை பயிற்சி பச்சுடையாம்புதூரில் இன்று மற்றும் நாளை நடைபெறுகிறது. பயிற்சியின் போது வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடைத்துறை, வேளாண்பொறியியல் துறை, வேளாண்விற்பனை மற்றும் வணிகம், விதைச் சான்று துறை, மண் ஆய்வுக் கூடம், பட்டு வளர்ச்சித் துறை, வனத்துறை மற்றும் வேளாண்மை அறியியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்களால் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் உழவர் மன்ற அமைப்பாளர்கள், உறுப்பினர்கள், விவசாயிகள் மற்றும் ஆர்வமுள்ள பொதுமக்கள் கலந்து கொள்ளலாம். இது தொடர்பாக மேலும் விபரங்களுக்கு சேந்தமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை தொடர்பு கொண்டு பயனடையலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புதன்சந்தையில் மாடுகளின் விலை வீழ்ச்சி**

**சேந்தமங்கலம்**, : புதன்சந்தையில் மாடுகளின் விலை வீழ்ச்சியடைந்தது. கேரள வியாபாரிகள் வருகை இல்லாததால் இந்த நிலை ஏற்பட்டதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

நாமக்கல் மாவட்டம், புதன்சந்தையில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை காலை முதல் மதியம் வரை மாட்டுச் சந்தை நடைபெறுவது வழக்கம். ஒரு நாளில் மட்டும் கோடிக்கணக்கில் வியாபாரம் நடைபெறும். இச்சந்தைக்கு கர்நாடகா, ஆந்திரா, கேரளா, பொள்ளாச்சி, சேலம், ஈரோடு, கோயமுத்தூர், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வியாபாரிகள் மாடுகளை வாங்குவதற்காக வருவது வழக்கம். இந்நிலையில் நேற்றுக் கூடிய மாட்டுச் சந்தையில் குறைந்த அளவே மாடுகள் விற்பனைக்கு வந்திருந்தது. தற்போது கேரளா மாநிலத்தில் உள்ள சோதனை சாவடிகளில் மாடுகளை ஏற்றி செல்ல கெடுபிடி செய்வதால் கேரளா வியாபாரிகள் நேற்று கூடிய மாட்டுச்சந்தைக்கு மாடுகளை வாங்க வரவில்லை. இதனால் மாடுகளின் விலை வீழ்ச்சி அடைந்தது. கடந்த வாரம் தி10 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட இறைச்சி மாடு நேற்று விலை சரிந்து தி8 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. கடந்த வாரம் தி24 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கறவைமாடு நேற்று தி22 ஆயிரத்திற்கு விலை குறைந்து விற்றது. கடந்த வாரம் 4 ஆயிரத்துக்கு விற்கப்பட்ட ஒரு மாதமே ஆன கன்றுக்குட்டி நேற்று தி3 ஆயிரத்துக்கு விற்கப்பட்டது.

**அரூரில் நாவல் பழம் விற்பனை அமோகம்**

**அரூர்**, : அரூரில் சாலையோரங்களில் தள்ளுவண்டியில் வைத்து நாவல் பழம் விற்பனை அமோகமாக நடக்கிறது.

ஆந்திரா மாநிலத்திலிருந்து வாங்கி வந்து, அரூரில் சாலையோரங்களில் தள்ளுவண்டியில் வைத்து நாவல் பழம் கிலோ ரூ200க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சர்க்கரை நோயாளிகள் சாப்பிட்டால் உடம்பிற்கு நல்லது என்பதால் பலரும் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். இப்பழம் கண், உடலுக்கு குளிர்ச்சியை தருகிறது. ரத்தத்தையும் சுத்திகரிப்பதுடன், மூளை வளர்ச்சிக்கும் உதவுவதாக கூறப்படுகிறது.

மேலும், வாயுத்தொல்லை, மண்ணீரல் வீக்கம் உள்ளவர்களும் நாவல் பழம் சிறந்த மருந்தாகும். மருத்துவ குணம் கொண்ட கருநிறத்தில் பளபளவென அழகான நாவல் பழத்தை தள்ளுவண்டியில் வியாபாரிகள் அடுக்கி வைத்திருப்பதை பார்த்தாலே நாவல் பழத்தை வாங்கும் ஆர்வத்தை தூண்டுகிறது. உடலுக்கு நல்லது என்பதால் ஏராளமானோர் நாவல் பழத்தை விரும்பி வாங்கி செல்கின்றனர்.

## <u>கிருஷ்ணகிரியில் கேரள பலாப்பழம் வரத்து அதிகரிப்பு</u>

**கிருஷ்ணகிரி**, : கிருஷ்ணகிரியில் விற்பனைக்காக கேரள மாநிலத்தில் இருந்து பலாப்பழம் வரத்து அதிகரித்து உள்ளது. இந்த பழங்கள் சாலையோரங்களில் குவிக்கப்பட்டு விற்பனை ஜோராராக நடக்கிறது.

கேரள மாநிலம் அலப்பி மாவட்டத்தில் ஏராளமான பலாப்பழ மரங்கள் உள்ளது. அங்கு விளையும் பலாப்பழங்களை ஒவ்வொரு ஆண்டும் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு அப்பகுதி விவசாயிகள் நேரடியாக கொண்டு வந்து விற்பனை செய்வதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். நேற்று அங்கிருந்து லாரியில் ஏற்றி வந்த பலாப்பழத்தை கிருஷ்ணகிரியில் பெங்களூர் சாலையில் உள்ள சென்ட்ரல் தியேட்டர் அருகே சாலையோரம் குவித்து வைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

கேரள மாநில பலாப்பழம் ருசியாகவும், தரமாகவும் உள்ளதால் பொதுமக்கள் இப்பழத்தை விரும்பி வாங்கி செல்கின்றனர். ஒரு பழம் அளவை பொருத்து ரூ50 முதல் ரூ100 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் விற்பனைக்கு கொண்டு வந்துள்ள கேரள மாநில விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். விற்பனை தொடர்ந்து 2 மாதங்கள் நடைபெறும் என அவர்கள் தெரிவித்தனர்.

## <u>வேளாண் கல்லூரியில் மாணவ குழுவினருக்கு பயிர் சாகுபடி குறித்த களப்பயிற்சி</u>

**புதுக்கோட்டை**, : திருச்சி நவலூர் குட்டப்பட்டில் அமைந்துள்ள அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரியில் 4ம் ஆண்டு படித்து வரும் மாணவர்கள் 11 பேர் கொண்ட குழுவினர் புதுக்கோட்டை வட்டாரத்தில் பயிர் சாகுபடி குறித்து களப்பயிற்சி எடுத்து வருகின்றனர்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் துணைவேந்தர், முனைவர் ராமசாமி திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

முதல்வர் பேராசிரியர் பாண்டியராஜன், பேராசிரியர் தியாகராஜன் மற்றும் உதவி பேராசிரியர் குருநாதன் ஆகியோர் தலைமையில் இக்கல்லூரியில் வேளாண் பட்டப்படிப்பு இறுதியாண்டு பயிலும் பழனி, சுப்பிரமணி, சுதிஸ்குமார், சரவணன், வெங்கடேஸ்வரன், நந்தகுமார், மோகன், புருஷோத்தமன், மகாதேவன், வெங்கடேஷ், மற்றும் ஆனந்தன் ஆகிய 11 மாணவர்கள் அடங்கிய குழுவினர் புதுக்கோட்டை வட்டாரத்தில் கடந்த 5ம் தேதி முதல் முகாமிட்டுள்ளனர். இவர்கள் ஆகஸ்ட் 31ம் தேதி வரை 3 மாதம் கிராமப்புற வேளாண் பணிகள் மற்றும் அதன் அனுபவத்தையும் நேரிடையாக பார்வையிட்டு அதன் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்வதற்காக பயிற்சி மேற்கொள்ள உள்ளனர். இப்பயிற்சியின் ஓர் அங்கமாக புதுக்கோட்டை வட்டாரம் தோப்புப்பட்டியில் முத்துலெட்சுமி என்கிற விவசாயியின் நிலத்தில் மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்த பயிற்சிகளை கற்றிந்தனர்.

மேலும், பயிற்சியில் மாணவர்களுக்கு மண்புழு உரம் தயாரித்தல் குறித்த செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

இதில் புதுக்கோட்டை வட்டார வோளாண்மை உதவி இயக்குநர் ரவிச்சந்திரன், வேளாண் அலுவலர் பூபதிகண்ணன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு உரிய ஆலோசனை வழங்கினர்.

## நாமக்கல்லில் நாட்டுக்கோழி வளர்ப்பு மருத்துவ பயிற்சி முகாம்

**நாமக்கல்**, : நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் மூலிகை முதலுதவி மருத்துவம் குறித்த இலவசப் பயிற்சி முகாம், நாமக்கல்லில் 25ம் தேதி நடைபெறுகிறது. இதுகுறித்து கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத் தலைவர் மோகன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நாமக்கல்லில் இருந்து திருச்சி செல்லும் சாலையில் உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் வருகிற 25ம் தேதி மதியம் 1.30 மணிக்கு நடைபெற உள்ள பயிற்சி முகாமில், நாட்டுக்கோழி வளர்ப்பின் மூலம் நல்ல வருவாய் ஈட்டுவது தொடர்பான அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்பட உள்ளன. இந்தப் பயிற்சியில் பண்ணையாளர்கள் மட்டுமின்றி ஆர்வமுள்ள அனைவரும் பங்கேற்கலாம். மேலும் விவரங்களுக்கு 04286-233230 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு அடிப்படை பயிற்சி**

**நாமக்கல்**, : சேந்தமங்கலம் வட்டார விவசாயிகளுக்கு கிராம அடிப்படை பயிற்சி பச்சுடையாம்புதூரில் இன்று(19ம் தேதி) தொடங்கி இரண்டு நாட்கள் நடைபெறுகின்றது. இது குறித்து நாமக்கல் வேளாண்மை துணை இயக்குனர் பாலசுப்பிரமணி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் தமிழ்செல்வன் உத்தரவின்படி, சேந்தமங்கலம் வட்டார விவசாயிகளுக்கு கிராம அடிப்படை பயிற்சி பச்சுடையாம்புதூரில் இன்று மற்றும் நாளை நடைபெறுகிறது. பயிற்சியின் போது வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடைத்துறை, வேளாண்பொறியியல் துறை, வேளாண்விற்பனை மற்றும் வணிகம், விதைச் சான்று துறை, மண் ஆய்வுக் கூடம், பட்டு வளர்ச்சித் துறை, வனத்துறை மற்றும் வேளாண்மை அறியியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்களால் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் உழவர் மன்ற அமைப்பாளர்கள், உறுப்பினர்கள், விவசாயிகள் மற்றும் ஆர்வமுள்ள பொதுமக்கள் கலந்து கொள்ளலாம். இது தொடர்பாக மேலும் விபரங்களுக்கு சேந்தமங்கலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை தொடர்பு கொண்டு பயனடையலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கரும்பு விவசாயிகள் சங்க கூட்டம்**

**திருமானூர்**, : திருமானூர் சாத்தமங்கலத்தில் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாவட்ட கூட்டம் நடந்தது. அயோத்தி வரவேற்றார். மாவட்ட தலைவர் ஜெயபால் தலைமை வகித்தார். அரசு கூடுதலாக அறிவித்த ரூ.300 கிடைக்கும் வரை வருகிற 26ம் தேதி ஆலையின் முன் தொடர் காத்திருக்கும் போராட்டம் நடத்துவது. விசை கரும்பு, கம்போஸ்ட் உரம் விரும்பும் விவசாயிகளிடம் மட்டும் எந்தவித ஜாமீனும் இல்லாமல் வழங்க வேண்டும். கரும்பு வெட்டு கூலியை ஆலை நிர்வாகமே ஏற்று கொள்ள வேண்டும். கரும்பு லோடு பதிவு செய்த தேதியை முறையாக ஆவணத்துடன் விவசாயியிடம் கொடுக்க வேண்டும். ஒரு டன் கரும்புக்கு அரை கிலோ சர்க்கரை இலவசமாக வழங்க வேண்டும். பதிவு செய்த அனைத்து

கரும்புகளையும் முழுமையாக வெட்ட வேண்டும். கரும்பு பதிவு செய்த தேதியிலிருந்து உரிய காலத்தில் (பருவத்தில்) கரும்பு வெட்ட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

துணைத்தலைவர் யோகநாதன், ராதாகிருஷ்ணன், சுந்தரமூர்த்தி, மாவட்ட கரும்பு விவசாயிகள் சங்க செயலாளர் மணியன், விவசாய சங்க வட்ட தலைவர் வரப்பிரசாதம், மணிகண்டன், கார்த்திக், சுகுமார், மணிமாறன் கலந்து கொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**<u>வெங்காயம் விலை கிடுகிடு உயர்வு: ஒரே நாளில் கிலோவுக்கு ரூ.15 அதிகரிப்பு</u>**

பெங்களூரில் வெங்காயத்தின் விலை கடந்த புதன்கிழமை ஒரு கிலோ ரூ. 20 ஆக இருந்தது வியாழக்கிழமை ரூ. 35 ஆக உயர்ந்தது.

ஒரே நாளில் வெங்காயத்தின் விலை ஒரு கிலோவிற்கு ரூ.15 வரை அதிகரித்துள்ளதால் பொது மக்களும், உணவு விடுதி உரிமையாளர்களும் சிரமம் அடைந்துள்ளனர். இந்த திடீர் விலையேற்றத்தின் காரணமாக கள்ளச் சந்தையில் வெங்காயத்தை பதுக்கும் செயல் நடந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக பெங்களூரில் உள்ள வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு வியாபாரிகள் சங்கத் துணைத் தலைவர் எஸ்.பாலகிருஷ்ணா, 'தி இந்து' செய்தியாளரிடம் கூறும்போது, இந்த ஆண்டு மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் பருவமழை சரியாக பெய்ய வில்லை. இதனால் வெங்கா யத்தின் உற்பத்தி கடுமையாக பாதிப்படைந்துள்ளது.

அதேபோல வட இந்தியாவில் பண்டிகை, திருமண விழா காலம் விரைவில் தொடங்கவுள்ளதால், வெங்காயத்தின் தேவை அதிகரித்துள்ளது. இதனால் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் வெங்காயம் தற்போது சந்தைக்கு வந்துள்ளது.

சந்தையில் வெங்காயத்தின் இருப்பு குறைவதால் கடந்த இரு நாட்களில் இந்தியா

முழுவதும் வெங்காயத்தின் விலை ஒரு கிலோவுக்கு ரூ. 5 முதல் ரூ. 18 வரை அதிகரித்துள்ளது.

பெங்களூரில் கடந்த புதன்கிழமை கிலோவுக்கு ரூ. 20 ஆக இருந்த வெங்காயத்தின் விலை வியாழக்கிழமை ரூ. 35 ஆக உயர்ந்தது. கடந்த திங்கள்கிழமை மகாராஷ்டிராவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயத்தின் விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ.1000 முதல் ரூ.1200 வரை இருந்தது. ஆனால், புதன்கிழமை இரவு விலை உயர்ந்து ரூ 3100 முதல் 3500 வரை விற்பனையானது. இதன் காரணமாகத்தான் பெங்களூரில் வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

இதேநிலை தொடர்ந்தால் வெங்காயத்தின் விலை வரும் அக்டோபர் மாதத்தில் ரூ.100-ஐ நெருங்க வாய்ப்புள்ளது. வெங்காய தட்டுப்பாட்டை உணர்ந்து மத்திய அரசு உடனடியாக வெங்காய ஏற்றுமதியை குறைத்தால் விலையேற்றம் ஓரளவு கட்டுக்குள் கொண்டுவரப்பட வாய்ப்பு இருக்கிறது" என்றார்.

கள்ளச் சந்தையில் பதுக்கல்?

வெங்காயத்தின் திடீர் விலை உயர்வு காரணமாக, அதை பதுக்கிவைக்கும் செயலில் சிலர் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது. வெங்காயத்தின் விலை மிக அதிகபட்சமாக உயரும்போது, அதனை சந்தைப்படுத்தி கோடிக்கணக்கில் லாபம் பார்ப்பதற்காக பதுக்கிவைத்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

கடந்த ஆண்டுகளிலும் இதே போல வெங்காயத்துக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை பயன்படுத்தி சிலர் அதிக லாபம் ஈட்டினர். எனவே, இதனை மத்திய, மாநில அரசுகள் தீவிரமாக கண்காணித்து வெங்காயத்தின் விலை உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சில்லறை வர்த்தகர்கள் தெரிவித்தனர்.